கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சு

பதவி வெற்றிடங்கள்

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிரந்தர பணியாட்தொகுதியிலுள்ள பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில் விபரங்கள்:

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க கடல் மாசடைவதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள வேலைகளை நிறைவேற்றுதல்.

1. பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) (HM 1-3) - 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சூழல் விஞ்ஞானம் / கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் / கடல் வள முகாமைத்துவம் / கடற்கரை மற்றும் கடல் வள முகாமைத்துவம் / சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் / விவசாய விஞ்ஞானம் / பிரயோக விஞ்ஞானம் / உயிரியல் / விலங்கியல் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் / உயிரியல் தொழில்நுட்பம் / நீர் வள தொழில்நுட்பம் / இரசாயனவியல் / பௌதிகவியல் போன்ற துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

சூழல் விஞ்ஞானம் / கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் / கடல் வள முகாமைத்துவம் / கடற்கரை மற்றும் கடல் வள முகாமைத்துவம் / சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் / விவசாய விஞ்ஞானம் / பிரயோக விஞ்ஞானம் / உயிரியல் / விலங்கியல் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் / உயிரியல் தொழில்நுட்பம் / நீர் வள தொழில்நுட்பம் / இரசாயனவியல் / பௌதிகவியல் போன்ற துறைகளில் முதுமாணிப் (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. சிரேஷ்ட முகாமையாளர் (HM 1-1) சேவை வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருடங்கள் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

HM 1-3-2025 - (ரூபா 152,500 - 15x4,100 - 214,000)

2. முகாமையாளர் (மாகாணம்) (HM 1-1) - 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சூழல் விஞ்ஞானம் / கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் / உயிரியல் / பௌதிகவியல் / இரசாயனவியல் போன்ற துறைகளின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்கூறிய பாடப் பரப்பின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் முதுமாணிப் (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. "முகாமையாளர்" (MM) சேவை வகுதியின் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் MM சம்பள வகுதியின் IIஆம் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வயது : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

HM 1-1 -2025 (ரூபா 140,640 -15x4,100 - 202,140/=)

3. முகாமையாளர் (செயற்பாடுகள்) (HM 1-1) - 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சூழல் விஞ்ஞானம் / கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் / கடல் வள முகாமைத்துவம் / கடற்கரை மற்றும் கடல் வள முகாமைத்துவம் / சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் / விவசாய விஞ்ஞானம் / பிரயோக விஞ்ஞானம் / உயிரியல் / விலங்கியல் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் / உயிரியல் தொழில்நுட்பம் / நீர் வள தொழில்நுட்பம் / இரசாயனவியல் / பௌதிகவியல் போன்ற துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்கூறிய பாடப்பரப்பின் கீழ் முதுமாணிப் (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. "முகாமையாளர்" (MM) சேவை வகுதியின் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் MM சம்பள வகுதியின் IIஆம் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வயது: 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு :

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

HM 1-1 -2025 (ரூபா 140,640 -15x4,100 - 202,140/=)

4. முகாமையாளர் (சட்டம்) (HM 1-1) - 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

01. மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

அத்துடன்

சட்டப் பாடப்பரப்பின் கீழ் முதுமாணிப் (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. "முகாமையாளர்" (MM) சேவை வகுதியின் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் MM சம்பள வகுதியின் IIஆம் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வயது : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

HM 1-1 -2025 (ரூபா 140,640 -15x4,100 - 202,140/=)

5. முகாமையாளர் (திட்டமிடல்) (HM 1-1) - 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள் :

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பொருளியல் / கணிதம் / வர்த்தகம் / புள்ளிவிபரவியல் / சமுத்திர நடவடிக்கைகள் / சூழல் முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட முதுமாணிப் (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. "முகாமையாளர்" (MM) சேவை வகுதியின் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் திட்டமிடல் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் MM சம்பள வகுதியின் IIஆம் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வயது : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

HM 1-1 -2025 (ரூபா 140,640 -15x4,100 - 202,140/=)

6. முகாமையாளர் (நிதி) (HM 1-1) - 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வர்த்தகம், கணக்கியல், நிதியியல், நிதி முகாமைத்துவம் அல்லது இயைபுடைய துறைக்குப் பொருத்தமான வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட முதுமாணிப் பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல் அல்லது இயைபுடைய விடயத்துறைக்குப் பொருத்தமான வகையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02. பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான வகையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. "முகாமையாளர்" (MM) சேவை வகுதியின் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் MM சம்பள வகுதியின் IIஆம் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வயது : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

HM 1-1 -2025 (ரூபா 140,640 -15x4,100 - 202,140/=)

7. முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) (HM 1-1) 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / வர்த்தகம் அல்லது இயைபுடைய விடயத்திற்குப் பொருத்தமான வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் முதுமாணிப் (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான வகையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. "முகாமையாளர்" (MM) சேவை வகுதியின் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் MM சம்பள வகுதியின் IIஆம் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

வயது : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

HM 1-1 -2025 (ரூபா 140,640 -15x4,100 - 202,140/=)

8. கடல்சார் சூழல் அதிகாரி (JM 1-2) - 03 வெற்றிடங்கள்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை

தகைமைகள்:

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சூழல் விஞ்ஞானம் / கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் / கடற்கரை மற்றும் கடல்சார் முகாமைத்துவம் / கடல்சார் சூழல் முகாமைத்துவம் / சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் / பிரயோக விஞ்ஞானம் / உயிரியல் / விலங்கியல் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் / இயற்கை விஞ்ஞானம் / உயிரியல் தொழில்நுட்பம் / நீர் வள தொழில்நுட்பம் / இரசாயனவியல் / பௌதிகவியல் போன்ற பாடத்துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. அதிகார சபையில் உதவி கடல்சார் சுற்றாடல் அதிகாரி பதவியில் (MA 5-1) சேவை வகுதியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

JM 1-2 -2025 (ரூபா 74,010 - 10x1,360-18x2,040 - 124,330.00)

9. உதவி கடல்சார் சூழல் அதிகாரி (MA 5-1) - 20 வெற்றிடங்கள்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - (பிரதான அலுவலகம் (கொழும்பு), துறைமுக அலுவலகம் (கொழும்பு), களுத்துறை, நீர்கொழும்பு, சிலாபம், காலி, ஆய்வுகூடம் (காலி), ஹம்பாந்தோட்டை, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம்)

தகைமைகள்:

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சூழல் விஞ்ஞானம் / கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் / கடல்சார் சூழல் முகாமைத்துவம் / சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் / பிரயோக விஞ்ஞானம் / உயிரியல் / விலங்கியல் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் / இயற்கை விஞ்ஞானம் / உயிரியல் தொழில்நுட்பம் / நீர் வள தொழில்நுட்பம் / இரசாயனவியல் / பௌதிகவியல் போன்ற பாடத்துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

MA 5-1 -2025 (ரூபா 58,740 - 10x1,190 - 15x1,360 - 11x1,670 - 109,410.00)

10. செயலாளர் (MA 2-2) - 01 வெற்றிடம்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)

தகைமைகள் :

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் :

செயலாளர் பதவியின் கடமைகளுக்கு இயைபான மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

பதவிக்கான விசேடத்துவ ஏனைய தகைமைகள்

கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை ஏற்புடையதாகும்.

வயது : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு:

(2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

MA 2-2 -2025 (ரூபா 50,540 - 10x540 - 7x630 - 4x1,080 - 20x1,280 - 90,270.00)

பொதுவானவை:

01. சகல விண்ணப்பதாரர்களும்,

i. இலங்கைப் பிரஜைகளாவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

02. தகைமை பெறும் தினம்:

சேவைக்கு / பதவிக்கு நியமிப்பதற்காக விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர் மேற்கூறப்பட்ட பதவிகளுக்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

03. நியமனத்தின் தன்மை:

நிரந்தரமான பதவி. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியரினால் செலுத்தப்படும் 10% த்திற்கு மேலதிகமாக அதிகார சபையினால் 15% பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% மேலதிகமாக பங்களிப்புச் செய்யப்படும்.

04. விண்ணப்பப் படிவத்தை அனுப்புதல்:

i. கடல்சார் சூழல் அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் **(https://mepa.gov.lk)** பதிவிறக்கம் செய்யக்கூடிய மாதிரிப் படிவத்தின் ஊடாக மட்டுமே குறித்த பதவிகளுக்காக விண்ணப்பிக்க வேண்டும்.
ii. ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
iii. அண்மையில் பெற்றுக்கொண்ட 2 நன்னடத்தைச் சான்றிதழ், கிராம சேவகரின் சான்றிதழ், பொலிஸ் அறிக்கை, தேசிய அடையாள அட்டை, சகல கல்விச் சான்றிதழ்கள், ஏனைய தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளை இணைத்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை **2026-01-02**ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் **தலைவர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 177, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் மேற்கூறிய புகைப்படப் பிரதிகள் மூலம் சமர்ப்பித்துள்ள சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
iv. அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் சட்ட சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
v. சகல வகையிலும் முழுமையற்ற, அடிப்படைத் தகைமைகள் அற்ற, இயைபுடைய சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படாத மற்றும் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பில் எமது அதிகாரசபை பொறுப்பு கூறாது.

தலைவர்,
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
இல. 177, நாவல வீதி, நாராஹென்பிட்டி,
கொழும்பு 05.
2025-12-19.